சுருக்கம்

விளம்பரம் – செய்தி மக்கள் தொடர்புத்துறை – 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களை சென்றடையக் கூடிய வகையில் பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களான பேருந்து நிலையம், சந்தைகள் போன்றவற்றில் மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படுதல் – நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (விளம்பரம்)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.128

நாள். 22.10.2021
திருவள்ளுவராண்டு 2052
பிலவ வருடம்–ஐப்பசி மாதம்–5ஆம் நாள்

படிக்கப்பட்டது:–

2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு, நாள் 06.09.2021.

******

ஆணை:

06.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், 2021–2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், "அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களை சென்றடையக் கூடிய வகையில் பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களான பேருந்து நிலையம், சந்தைகள் போன்றவற்றில் மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படும்" என அறிவித்தார்கள்.

2. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்படும் தனியார் நிறுவனம் தேவையான உபகரணங்களுடன் மின் சுவர்களை முக்கிய பேருந்து நிலையங்கள் மற்றும் சந்தைகளில் நிறுவி, மும்முனை மின் இணைப்புப் பெற்று, வர்த்தக மின் கட்டணம் செலுத்தி, உள்ளாட்சி நிறுவனத்திற்கு வாடகை செலுத்தி, பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு, சென்னையிலிருந்து ஒளிபரப்புச் செய்யவும் மற்றும் இத்துறை அளிக்கும் ஒளிப்பதிவு நாடாக்கள், செய்திகள், உரைகள் முதலியவற்றை தொகுத்து பின்னணி குரல் மற்றும் இசை சேர்த்து வெளியிடுவதற்கும், தேவையென்றால் இயக்கக படமாக மாற்றி வெளியிடும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கும் நிர்வாக அனுமதி வழங்கலாம் எனக் கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2-இல் ஆணை வெளியிடப்படுவதைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் (செய்தி) அவர்களின் அறிவுரைக்கேற்ப முக்கியப் பேருந்து நிலையங்கள் மற்றும் சந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு மின் சுவர்கள் அமைக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

பெறுநர்:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நகல்:
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அவர்களின்
தனிச்செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின்
தனிச்செயலாளர், தலைமைச்செயலகம், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (நிதி) அவர்களின் முதுநிலை
தனிச்செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
செய்தி மக்கள் தொடர்பு (கணக்கு/வரவு-செலவு)த் துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (அநமு-2)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

தசை
22/10/21